பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 22 (6—9—68) வெள்ளி ★ வெளியூர்: ஆவணி 23 (7—9—68) சனி [இதழ்: 71

## இலவசமாக நிலம்

சென்னை, செப், 5—
வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பர்மா அகதிகளுக்கும், நில மற்ற விவசாயிகளான உள்ளூர்க்காரர்களுக்கும் மதுராந்தகம் தாலுகா சுணும்பேடு கிராமத்தில் இலவசமாகக் குடும்பத்துக்கு இரண்டு ஏக்கர் நிலம் வீதம் ஒதுக்க தமிழக அரசு எண்ணியுள்ளது.

இதற்கு விண்ணப்பித்துக் கொள்ளத் தகுதிவாய்ந்தவர்கள் இம்மாதம் 15-ந் தேதிக்குள் செங்கற்பட்டு துணைக் கலெக்டருக்கு மனுச்செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

# தேர்தலில் காங்கிரசார் தில்லுமுல்லு

## தலைமை நீதிமன்றத்தில் அம்பலமாயிற்று

புதுடில்லி, செப். 5 —
கடந்த பொதுத் தேர்தலில் வாக்குகள எண்ணப்பட்டபோது காங்கிரசுக் கட்சிக்கு ஆதரவாக நடைபெற்ற தில்லுமுல்லு இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

ஐம்பது வாக்குச் சீட்டுகள் அடங்கிய கட்டு ஒன்றில் 49 சீட்டுகள் ஜனசங்க வேட்பாளருக்கு ஆதரவாகவும், ஒரே வாக்குச் சீட்டு மட்டுமே காங்கிரசுக்கு ஆதரவாகவும் இருக்க, அந்தக் கட்டு முழுவதும் காங்கிரசு வேட்பாளர் வாக்குகளாகச் சேர்த்துக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த 'கர்னுட்-2' என்ற நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தலில்தான் இந்தத் தில்லுமுல்லு நடந்திருக்கிறது.

இந்தியத் தலைமை (சுப்ரீம்) நீதிமன்றத்தில் மீண்டும் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டபோது இந்தத் தில்லுமுல்லு அம்பலமாயிற்று.

"நாடாளுமன்ற மக்கள்சபைக்குக் காங்கிரசு வேட்பாளர் மதுலால் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது" என்று அறிவிக்கக்கோரி ஜனசங்க வேட்பாளர் சுவாமி இராமேசுவரானந்த் என்பவர் தாக்கல் செய்திருந்த மனுவை, பஞ்சாப்-அரியானு உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

பிறகு அவர், தலைமை நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தார்; தலைமை நீதிமன்றம், மீண்டும் வாக்குகளை எண்ண ஆணை பிறப்பித்தது.

தேர்தலின்போது, சுவாமி இராமேசுவரானந்துக்கு 1,68,001 வாக்குகளும், மது லாலுக்கு 1,68,204 வாக்குகளும் கிடைத்தன; 'காங்கிரசு வேட்பாளருக்கு 203 வாக்குகள் கூடுதலாகக் கிடைத்ததற்குக் காரணம். வாக்கு எண்ணுகையில் நடைபெற்ற தில்லுமுல்லே' என்று அப்பீல் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

திரு. இராமேசுவரானந்த், தேர்தலில் ஊழல் முறைகளைக் கையாண்டதாக திரு. மது லால், எதிர் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இரு மனுக்களையுமே உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது; இதனை எதிர்த்துதான் இராமேசுவரானந்த் தலைமை நீதிமன்றத்துக்கு மனுக் கொடுத்தார்.

"கால்சா ஜாரோசி வாக்குச்சாவடியின் வாக்குப் பெட்டிகள்தான் அதிகத் தகராறுக்கு உரியவை" என்று இரு தரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிமன்றம் முடிவு செய்தது

தலைமை நீதிபதியும், நீதிபதி ஜி. கே. மித்தரும் வாக்குச் சீட்டுப் பெட்டியைத் திறந்து வாக்குகளை எண்ணினர்.

அப்போதுதான், 49 வாக்குச் சீட்டுகள், காங்கிரசு வேட்பாளரின் கணக்கில் சேர்க்கப்பட்டது தெரியவந்தது.

அந்தக் கட்டில் மேலே இருந்த வாக்குச் சீட்டு மட்டும் காங்கிரசுக்கு ஆதரவாகவும், அடியிலிருந்த 49 சீட்டுகளும ஜனசங்க வேட்பாளருடையவையாகவும் இருந்தன.

"மேற்கொண்டும் வாக்குகளை எண்ண வேண்டுமா?" என்று மதுலாலின் வழக்கறிஞரைத் தலைமை நீதிபதி கேட்டார; அதற்கு அவர், மதுலாலுக்கு 16 ஆயிரத்துக்கு மேல் அதிக வாக்குகள் கிடைத்திருக்க வேண்டும் என்றும் இந்த வழக்கில் முடிவுகாண வாக்குச் சீட்டுகள் அனைத்தையும் எண்ண வேண்டும் என்று வற்புறுத்தினர்.

அவர் வாதத்தை நீதிமன்றம் புறக்கணித்தது; '49 வாக்குகள் தவருன முறையில் காங்கிரசு வேட்பாளருடையவையாகச் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறோம். இன்னமும்தொடர்ந்து எண்ணுவதற்கு அவசியம் என்ன இருக்கிறது?'' என்று நீதிபதிகள் கூறினர்.

# எதற்கெடுத்தாலும் டெல்லியின் முட்டுக்கட்டை!

## அமைச்சர் மா. முத்துசாமி கண்டனம்

சேலம். செப், 6—
'முன்பு இங்கு 'திங்கட்கிழமை இரவும், வியாழக்கிழமை இரவும் ஓட்டல்களில் சாப்பாடு போடக்கூடாது' என்று போடப்பட்டிருந்த உத்தரவை ரத்து செய்து, 'திங்கட்கிழமை--வியாழக்கிழமை இரவுகளில் சாப்பாடு போடலாம்' என்று உணவு அமைச்சர் மதியழகன் உத்தரவிட்டார்; அதற்குக்கூட டெல்லி அரசு, 'எப்படி உத்தரவு போடலாம்' என்று கேட்டிருந்தது; அந்த அளவுக்கு இங்கு மாநில அமைச்சர்களுக்கு அதிகாரங்கள் இல்லை!

"நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் அமைக்கப்பட்டால் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க வசதி ஏற்படும்; ஆனுல், இரண்டாவது சுரங்கம் ஏற்படுத்த டெல்லி அரசு தடையாக இருக்கிறது!

"எதற்கெடுத்தாலும் டெல்லி அரசு முட்டுக்கட்டை போடுகிறது; எனவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை; டெல்லியில் குவிந்துகிடக்கும் அதிகாரங்களைப் பிரித்து மாநில அரசுகளுக்குத் தரவேண்டும்"

இவ்வாறு உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி அவர்கள், இங்கு தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர்.

# தொழிலாளர்--முதலாளிகள் கடமை

## அமைச்சர் மாதவன் அறிவுறுத்தல்

சென்னை, செப். 6—
"தொழிலின் கொடுக்கும் சக்தியைக் கருத்தில்கொண்டு தொழிற்சங்கங்கள் தங்கள் கோரிக்கைகளைத் தயாரிக்க வேண்டும்; இல்லையென்ருல், தொழில் அதிபர்கள் அக்கோரிக்கைகளை நிராகரிக்க நேரிடும்; இதன் விளைவாக வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்ற தவிர்க்க முடியாத நிலைகள் உருவாகலாம்.

"அதே கட்டத்தில் தொழில் அதிபர்களும், தொழிலாளர்களின் நேர்மையான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற முயல வேண்டும்; அதன் மூலம் தொழில் துறையில் அமைதியைக் காக்க வேண்டும்."

இவ்வாறு சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

இந்திய அரசின் தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் நடைபெற்ற பெண் தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ருேருக்குச் சான்றிதழ் வழங்கும் விழா ஆக. 31-ம் நாள் நடைபெற்றது; திரு. எஸ். சி.சி. அந்தோணி தலைமை தாங்கினர்.

மண்டல இயக்குநர் திரு. எஸ். வேதமுத்து வரவேற்புரையாற்றுகையில், தமிழகத்தில் முதன் முறையாகப் பெண்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி இதுவென்றும் இதுவரையில் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 1,200 தொழிலாளர்களுக்குத் தொழிலாளர் பயிற்சி ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், பயிற்சியில் வெற்றி பெற்ற பெண் தொழிலாள ஆசிரியர்களுக்குச் சானறிதழ் வழங்கினர்; 'தொழிலாளர் கல்வித் திட்டம் பெண் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது தமக்கு மகிழ்ச்சியளிக்கிறது' என்று அவர் குறிப்பிட்டார்.

தொழிலாளர்கள் தங்களது உரிமைகளையும் கடமைகளையும் சரிவரப் புரிந்துகொண்டு சிறந்த தொழிலாளியாகவும், சிறந்த குடிமகனுகவும் பணியாற்றுவதற்கு இந்தக் கல்வி உதவும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அவர்.

# இரஷ்யாவில் நகராட்சிகள் நிலை

மேலும் அமைச்சர் முத்துசாமி அவர்கள், இரஷ்யாவில் நகராட்சிகளுக்குள்ள அதிகாரங்கள் பற்றி விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"இரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவிலுள்ள நகராட்சியின் வருமானம் ஆண்டுக்கு ரூ. 120 கோடி; மாஸ்கோ நகரில் பாதாள இரயில் நிர்வாகத்தையும், பஸ்களையும் நகராட்சியே நடத்துகிறது.

"மாஸ்கோவிலுள்ள கட்டிடங்கள் நகராட்சிக்குச் சொந்தம்: அங்கு ஆருயிரம் அறைகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டப்பட்டப்பட்டு வருகிறது; வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்கள் இந்தக் கட்டிடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

"இரஷ்யாவில் நகராட்சிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்

(4 ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர்கள் துயர் துடைப்பதே அரசின் நோக்கம்

## அமைச்சர் சாதிக் பாட்சா விளக்கம்

சென்னை, செப். 6—
"ஆசிரியர்களே நாட்டின் எதிர்காலச் சமுதரயத்தை உருவாக்குகின்றவர்கள்; அவர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த இடமளிக்கப்படல் வேண்டும்; தமிழக அரசு இதில் அக்கறையுள்ள அரசு என்பதை ஆசிரியர்கள் அனைவரும் நன்கு அறிவர்; ஆனுல் ஆர்வத்துக்கு ஏற்ப அரசின் நிதி ஆதாரங்கள் அமையவில்லை!

"ஆசிரியர்கள் தங்களது சொந்த வாழ்வில் மாற்றம் காண்பதோடு, சமுதாயத்திலும் பெரிய மாற்றம் ஏற்படுத்த அவர்களது உழைப்புக் கிடைக்க வேண்டும்.

"உலகம் உய்ய அரும்பணியாற்றும் ஆசிரியர்கள், தங்கள் வாழ்வின் மாலைப்பொழுதில் துன்பப்படுவது கூடாது; இத்தகையோருக்கு உதவவே ஆசிரியர் நல நிதி ஏற்பட்டுள்ளது; இந்த நிதிக்கு மக்கள் நல்லாதரவினை அளிக்க வேண்டும்'

என்று அமைச்சா திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், ஆசிரியர்கள் நாள் விழாவுக்குத் தலைமையேற்றுக் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# ஆயிரம் மதிப்பெண்கள் திட்டம்

## சிறந்த மாணவர்களை உருவாக்க உதவும்

### கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

திருநெல்வேலி, செப். 5—
"மாணவர்களின் திறமையை மதிப்பிடுவதற்குப் பெரிய நாயக்கன்பாளையம் உயர்நிலைப் பள்ளியில் 1000 மார்க் திட்டம் சோதனைக் கட்டமாக ஏற்படுத்தப்பட்டது; இத்திட்டம் வெற்றியடைந்தால் இது பரவலாக விரிவுபடுத்தப்படும்"

என்று கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் 'ஆசிரியர் நாள் விழா'க் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

"இத்திட்டத்தின்படி மாணவர்களின் கையெழுத்து-படம்வரையும் திறமை-பண்பு-விளையாட்டுகளில் காட்டும் அக்கறை இவைகளுக்கு 400 மதிப்பெண்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

# காந்தியார் கொள்கைகளைக் கைகழுவிவிட்டனர்

## அவரால் பெற்ற பயனையும் மறந்துவிட்டனர்

### இன்றைய காங்கிரசுக்காரர்களின் தகுதி என்ன?— அன்னா சாகேபின் வேதனைக் குரல்

சென்னை, செப். 6—

"காந்தியின் கொள்கைகளுக்கு உதட்டளவிலே நாம் அனுதாபம் காட்டினோமே தவிர, அவற்றை உண்மையில் பின்பற்றவில்லை. நாடு விடுதலை அடைய வேண்டும்' என்ற ஒரே ஆசை நமக்கிருந்தது; அதற்காக நாம் அவரை நன்கு பயன்படுத்திக் கொண்டோம்: அவரும் நம்மைப் பயன்படுத்திக் கொண்டார்; ஆதலின், காந்தியின் கொள்கைகளை நாடு பின்பற்றவில்லையே என்று காங்கிரசு ஊழியர்களாகிய நாம் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை"

என்று வார்தா காந்தி சேவா சங்கத்தின் தலைவர் திரு. அன்னா சாகேப் சகஸ்ரபுத்தே கூறினர்.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற தமிழ்நாடு நிர்மாண ஊழியர் மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"காந்தி ஒரு தனிப்பட்ட உயர்ந்த மனிதர்; அவரது எண்ணங்களை — இலட்சியங்களை காங்கிரசு ஊழியர்களாகிய நாம் மனத்தில் கொள்ளவில்லை -- பின்பற்றவும் இயலவில்லை.

நாடு சுதந்தரம் பெற வேண்டுமென்ற ஆசை நமக்கிருந்தது; காந்தி அம்மாதிரி விரும்பினரோ என்னவோ -- நாம் அவரைப் பயன்படுத்தி விடுதலையைப் பெற்றுவிட்டோம்; நாடு துண்டாக்கப்பட்டதையும் ஒப்புக்கொண்டு விடுதலையைப் பெற்றுவிட்டோம்.

சுதந்தரம் பெறுவதற்கு முன் பிரிட்டிஷாருடன் நடைபெற்ற கடைசி பேச்சுவார்த்தையின் போது, காந்தி கலக்கப்படவில்லை; சரித்திரம் இதைக் கூறும்.

புரட்சி என்பது ஒரு தலைமுறையில் ஒரு தடவைதான் ஏற்பட முடியும்; அரசியல் புரட்சி ஒரு தடவை ஏற்பட்டுவிட்டது; சமுதாய—பொருளாதாரப் புரட்சியும் அதே தலைமுறையில் ஏற்பட முடியாது; அடுத்த தலைமுறை அல்லது மூன்றுவது தலைமுறையில்தான் ஏற்படலாம்.

காந்தியின் தத்துவங்களை -- கொள்கைகளை மக்களிடையே புகுத்துவதற்கான தகுதி நமக்கு இல்லை; அந்தத் தகுதியை நாம் முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும்; அதற்குக் காந்தியின் நூற்றாண்டு விழா தக்கதொரு வாய்ப்பை நமக்கு அளிக்கிறது.

காந்தியின் செய்தியை -- கொள்கைகளை மக்களிடையே -- இளைஞர்களிடையே ஊட்டுவதற்கான தகுதியை நாம் பெற்றுக்கொள்ள நாம் இந்த நூற்றாண்டு விழாவின்போது முயற்சி செய்வதுதான் சிறந்த பணியாகும்,"

# எஸ்.எஸ்.எல்.சி.-- புதிய தேர்வு முறை

## 1969 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும்

திருச்சி, செப். 6—

தமிழ் நாட்டில் பள்ளிக்கூடச் சீரமைப்பின்படி 11-வது வகுப்பில் எஸ். எஸ். எல். சி. புதிய தேர்வு முறை 1969 மார்ச் திங்களில் நடைபெறும்; எஸ். எஸ். எல். சி. தேர்விலிருந்து அமுலுக்கு வரும்.

சீரமைப்புத் திட்டத்தின்படி, மாநிலத்தின் உயர்நிலைப் பள்ளிகளில் 1967-68 கல்வி ஆண்டில் 10-வது வகுப்பில் விருப்பப் பாடம் புகுத்தப்பட்டது; 1968-69-ல் 11-ம் வகுப்புச்கு விரிவாக்கப்பட்டது.

1969 மார்ச்சிலிருந்து எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதும் மாணவர்கள், விருப்பப் பாடத்திலும் வினாத் தாளுக்குப் பதில் எழுத வேண்டும்;

புதிய திட்டத்தின்கீழ் எஸ். எஸ். எல். சி. தேர்வில் பெரும் மாறுதல் இராது. அந்தத் தேர்வில் மொத்த அதிகபட்ச மதிப்பெண் பழைய திட்டத்தைப் போல 600 ஆக இருக்கும்; ஆனால் பழைய திட்டத்தில், தமிழ்த் தேர்வுக்கு 200 மதிப்பெண்கள் இருந்தன; புதிய திட்டத்தின்கீழ் தமிழுக்கு 100 மதிப்பெண்களும், விருப்பப் பாடத்துக்கு 100 மதிப்பெண்களும் இருக்கும்.

1969 மார்ச் தேர்வில் இரு மொழிப் பாடங்களிலும், ஒரு விருப்பப் பாடத்திலும், 3 முக்கியப் பாடங்களிலும் மாணவர்கள் தேர்வு எழுதுவார்கள்.

மதிப்பெண்கள் விவரம்: மொழிகள் (முதல் பிரிவு):—வட்டார மொழி அல்லது தாய் மொழியில் இரு வினாத் தாள்கள் இருக்கும்; ஒவ்வொன்றுக்கும் 50 மதிப்பெண்; ஆக மொத்தம் 100 மதிப்பெண்.

மொழிகள் (இரண்டாவது பிரிவு):— ஆங்கிலத்தில் இரு வினாத் தாள்கள் இருக்கும்; ஒவ்வொன்றுக்கும் 50 மதிப்பெண்; மொத்தம் 100.

முக்கிய பாடங்களில் துவக்கக் கணக்குக்கும், துவக்க விஞ்ஞானத்துக்கும் தலா 100 மதிப்பெண்.

வரலாறு, பூகோளம் ஆகியவற்றுக்கு தலா 50 மதிப்பெண்; ஆக மொத்தம் 100.

விருப்பப் பாடத்துக்கு 100 மதிப்பெண்.

எஸ். எஸ். எல். சி -வில் எல்லா ஆறு பாகங்களுக்கும் மொத்த மதிப்பெண் 600.

புதிய திட்டத்தின்கீழ் மாறுதல்கள், பாடத் திட்டங்கள் வருமாறு:—

இந்த ஆண்டு சனவரியில் மும்மொழித் திட்டத்தை அரசு ஒழித்து இரு மொழித் திட்டத்தைக் கொண்டுவந்தது. கீழ்க்கண்டபடி பள்ளிகளில் மொழிப் பாடங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன:—

'ஏ' பிரிவு: வட்டார மொழி அல்லது வட்டார மொழியுடன் மாறுபட்டிருந்தால் தாய் மொழி.

'பி' பிரிவு: ஆங்கிலம் அல்லது வேறு இந்திய மொழி அல்லாத மொழி.

'ஏ' பிரிவு மொழி முதல் வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை கற்பிக்கப்படும்.

'பி' பிரிவு மொழி 3-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை கற்பிக்கப்படும்.

இரு மொழிகளிலும் தேர்வுகள் கட்டாயம்.

வரலாற்றுக்கும், பூகோளத்துக்கும் பொது வினாத்தாள் இருக்கும். இரண்டையும் சேர்த்துக் குறைந்தபட்ச மதிப்பெண் வாங்கினால் தேர்வு கிடைக்கும்.

வரலாறு, பூகோளத்துக்கும் ஒரு வினாத் தாள் இருக்கும்; நேரம் இரண்டரை மணி.

விருப்பப் பாடத்துக்கு ஒரு வினாத் தாள்; நேரம் இரண்டரை மணி.

மொழிப் பாடங்களிலும் முக்கிய பாடங்களிலும் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் 11-வது வகுப்புப் பாடப் பகுதிகளில் மட்டும் கேள்விகள் கேட்கப்படும்.

விருப்பப் பாடத்தில் 10-வது, 11-வது வகுப்புக்களில் உள்ள பாடப் பகுதிகளிலிருந்து எஸ். எஸ். எல். சி. தேர்வில் கேள்விகள் கேட்கப்படும்.

# பேரறிஞர் அண்ணா 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழா

## செப். 15 தொடங்கி 30-ம் நாள் வரை நாடெங்கும் கொண்டாடுக!

### அமைப்புச் செயலாளர் வேண்டுகோள்

நாட்டின் முதல்வர் — நம் கழகத்தின் தனிப் பெருந்தலைவர் — அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை செப்டம்பர் 15-ம் நாள் முதல் செப்டம்பர் திங்கள் இறுதிவரை சிற்றூர், பேரூர், நகரம், பெருநகரம், வட்டம், மாவட்டம் ஆகிய கழகத்தின் எல்லா அமைப்புக்களும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமது பொதுவாழ்வின் மூலம் நம் நாட்டின் நல்வாழ்வுக்கும், ஏழை--எளிய மக்களின் ஏற்றத்திற்கும் அயராது பாடுபட்ட தன்மையை நாடு நன்கு உணர்ந்திருக்கிறது.

நாட்டின் சமுதாயத்துறை — அரசியல் துறை — தொழிலாளர்துறை — கலைத்துறை — கல்வித்துறை உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அண்ணா அவர்கள் ஈடுபாடு கொண்டு நாட்டுக்கே தனிச் சிறப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இன்று உலக நாடுகளும் உணர்ந்து பாராட்டுகின்றன.

இவ்விதப் புகழுக்குரிய நம் அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகக் கொண்டாட வேண்டுவது நம் ஒவ்வொருவரின் நீங்காக் கடமையாகும்.

## விழா நாட்களில்...

★ அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை வெளியிட்டு எங்கும் பரப்புதல்;

★ அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவுகளைப் பதிவு செய்து வைத்திருப்போர், பட்டிதொட்டிகளிலெல்லாம் ஒலி பரப்புதல்;

★ அறிஞர் அண்ணா அவர்கள் வழங்கியுள்ள நாடகங்களை நாடெங்கும் எளிய முறையிலும், சிரிய தன்மையிலும் நடித்துக் காட்டுதல்;

★ அறிஞர் அண்ணா அவர்களின் தொழிலாளர் நலன் பேணும் கொள்கைகளைப் பாட்டாளித் தோழர்களிடையே பரப்புதல்;

★ அறிஞர் அண்ணா அவர்கள் மொழிக் கொள்கையின் மூலமாகக் கண்ட வெற்றியினை நாடெங்கும் முழக்குதல்;

★ அறிஞர் அண்ணா அவர்களைத் தலைவராகக்கொண்டு இயங்கும் தமிழக அமைச்சரவையின் சாதனைகளை எவரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்தல்;

★ ஏழை -- எளியவர்களுக்கு உணவும், உடையும், இன்ன பிற உதவிகளையும் வாரி வழங்குதல்;

★ பள்ளிச் சிறுர்களுக்குப் பலகை, புத்தகம், இனிப்பு ஆகியன வழங்குதல்;

★ ஊரெங்கும் — நாடெங்கும் ஊர்வலங்களும், விழாக் கூட்டங்களும் சிறப்புற நடத்துதல்;

★ வீடெங்கும் — வீதியெங்கும் வண்ணக்கோலமிட்டும், கழகக் கொடிகளை ஏற்றியும், தோரணங்களைக் கட்டி அலங்கரித்தும், அண்ணா--அண்ணியார் ஆகியோருடைய திருவுருவப் படங்களை அலங்கரித்தும் விழாக் கொண்டாடுதல் —

போன்ற செயல்முறைகளின் வாயிலாக — அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை ஊரும் உலகமும் போற்றும் வகையில் கொண்டாடுவதற்கு இன்றே முனைந்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கழகத்தின் எல்லா அமைப்புகளையும், கழகச் சார்புடைய எல்லாத் துணை அமைப்புகளையும், நிறுவனங்களையும், கழக ஆதரவாளர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
20—8—1968

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர் (தி.மு.க.)

# அரிசிப் பற்றுக்குறை கடுமையாகும்

## மத்திய அரசுக்கு நெருக்கடி நிலை

### ஆந்திரமும் கைவிரித்துவிட்டதாகத் தகவல்

புதுடில்லி, செப் 6—
1968-69-ல் மத்திய அரசுக்கு அரிசிப் பற்றுக்குறை கடுமையாக இருக்குமாம்; விலை கொடுத்து வாங்குவதற்குக்கூட அரிசி கிடைக்கவில்லையாம்!

"மற்ற மாநிலங்களின் அரிசித் தேவையை நிறைவு செய்வதற்கு அரிசி கொடுத்து உதவுவதற்கில்லை" என்று ஆந்திர அரசு ஏற்கனவே மத்திய அரசு அறிவித்துள்ளது.

"போதுமான பருவ மழை பெய்யாததால் ஆந்திரம் உட்பட பல மாநிலங்களில் பொதுவாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே அயல் நாடுகளிலிருந்து உணவுத் தானியம் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கொள்கை முற்றிலும் சரியானதுதான்" என்று மத்திய உணவு அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஒரு பருவ மழை போதுமானபடி பெய்தால் போதாதென்றும் அந்த ஒரு மழையைக் காரணமாகக்கொண்டு உணவுத் தானிய இறக்குமதியை நிறுத்த முடியாதென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

### தமிழ்நாட்டில் மழை மிகக் குறைவு

புதுடில்லி, செப். 6—
"சூன் முதல் நாளிலிருந்து ஆகஸ்டு 28-ம் நாள்வரை தமிழ்நாட்டில் மழை மிகக் குறைவாகவே இருந்தது" என்று மத்திய வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

### பருவ மழை தவறியதன் விளைவு

சென்னை, செப். 6—
"தமிழ்நாட்டின் பெரும் பகுதிகளில் தென் மேற்குப் பருவ மழை தவறியதால், பருத்தி, நிலக்கடலை, புஞ்சைப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன" எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

### உணவு அமைச்சர் முன்னெச்சரிக்கை

மதுரை, செப். 6—
"போதுமான மழை இல்லாததால், தமிழகத்தில் உள்ள 'மானம் பார்த்த' நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன"
என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"உணவு நிலைமை கவலை தருவதாக இல்லையெனினும், இப்போது உள்ள கையிருப்பு அரிசியைப் பாதுகாப்பதற்கு அரசு அரிசிப் பங்கீட்டைச் சிறிது குறைக்க வேண்டியிருக்கும்; அரிசிப் பங்கீட்டில் ஏற்படும் குறைப்பைக் கோதுமையையும், கோதுமைப் பண்டங்களையும் அதிகமாக ஒதுக்குவதன்மூலம் ஈடு செய்யப்படும்" என்று தெளிவுபடுத்தினார்.

மழை பிந்தியதால் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதிலும் தாமதம் ஏற்பட்டதாகவும், அதையடுத்துக் குறுவை அறுவடை தாமதப்பட்டதாகவும், அதன் காரணமாக அடுத்த இரு மாதங்கள் தமிழ்நாட்டில் உணவு நிலைமை சற்று சிரமமாக இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

'மதுரை, கோவை, தருமபுரி மாவட்டங்களில் போதுமான மழை பெய்யவில்லை" என்று அவர் கூறினார்.

# இந்திய அரசின் விருது

## தமிழகத்தில் 9 ஆசிரியர்கள் பெறுவர்

புதுடில்லி, செப் 5—
இந்த ஆண்டில் 58 துவக்கப் பள்ளி ஆசிரியர்கட்கும், 32 இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கட்கும், 9 சமஸ்கிருத ஆசிரியர்கட்கும் தேசிய விருதுகள் அளிக்கப்படும்.

1958-ல் இந்தத் திட்டம் துவங்கப்பட்ட பிறகு இந்த ஆண்டு முடிய 906 ஆசிரியர்கள் விருதுகள் வழங்கப்பட்டிருக்கிறார்கள்.

தேசிய விருது பெறும் ஒவ்வோர் ஆசிரியருக்கும் ஒரு தகுதிச் சான்றிதழும் ரூ. 500 ரொக்கப் பரிசும் அளிக்கப்படும்.

தமிழகத்தில் இவ்வாண்டு தேசிய விருது பெறுவதற்கு ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# கூட்டுறவு இயக்கத்தில் சீர்திருத்தம்

## 'பெருச்சாளி'களை ஒழிக்க நடவடிக்கை

புதுடில்லி, செப். 5—
கூட்டுறவு இயக்கத்தில் சுயநலச் சக்திகள் வளராதபடி தடுப்பதற்கான பல நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு யோசனை தெரிவித்துள்ளது.

"லேவாதேவிக்காரர்கள் -- வியாபாரிகள் -- இதர இடைத்தரகர்களைக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து விலக்கிவைக்க வேண்டும்; அவசியமானால், இதற்காகச் சட்டம் கொண்டுவர வேண்டும்" என்பது இந்த நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

நிர்வாகக் குழுக்களில் சிறிய விவசாயிகளுக்கும், சமூகத்தில் வசதி குறைந்த பிரிவினருக்கும் இடம் ஒதுக்கவேண்டும் என்பது மற்றொரு யோசனையாகும்.

சென்ற சூன் திங்களில் சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு தெரிவித்த சிபாரிசுகளையடுத்து மத்திய அரசு, இவ்வாறு யோசனை கூறியுள்ளது.

கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் உருவாவதற்குச் சுயநல சக்திகளின் வளர்ச்சி தடங்கலாயிருப்பது பற்றி மத்திய கூட்டுறவு அமைச்சர், முதலமைச்சர்களுக்கு ஏற்கனவே எழுதியிருக்கிறார்.

மாநில அரசுகள் இதை முன்னுரிமையுடன் கவனிப்பதில் தீவிர அக்கறை காட்டுகின்றன; என்பது இந்தக் கடிதத்துக்கு கிடைத்துள்ள பதில்களிலிருந்து தெரிகிறது.

# துர்காப்பூர் உருக்காலையில் திடீர் வேலை நிறுத்தம்

துர்காப்பூர், செப். 4—
"துர்காப்பூர் உருக்காலையில் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் திடீரெனச் சட்ட விரோதமான முறையில் வேலையை நிறுத்திவிட்டு, அங்கிருந்த இயந்திரக் கருவிகளுக்குச் சேதம் விளைவித்தனர்; 36 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்" என்றும் ஆலை நிர்வாகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்கள் வேலையைத் திடீரென நிறுத்தியதோடன்றி, பல்வேறு ஊது உலைகளைக் குளிர வைக்கும் பம்புகளையும் நிறுத்திவிட்டனராம்.

ஊது உலைகளுக்கும், இன்னும் சில இயந்திரங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், பழுது பார்க்கமுடியாத அளவுக்கு சில இயந்திரங்கள் நாசமடைந்துவிட்டதாகவும், அவ்வகை இயந்திரங்கள் இறக்குமதி செய்யவேண்டியிருக்கலாம் என்றும் அறிக்கை மேலும் தொடர்ந்து தெரிவிக்கிறது.

இயந்திரங்களையும் ஊது உலைகளையும் பழுதுபார்க்க அவகாசம் தேவையாதலால் உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்படும் எனக் கருதப்படுகிறது.


பேரறிஞர் அண்ணா அவர்களின்
60-ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி

'நம் நாடு'
சிறப்பு மலர்

14--9--68 அன்று வெளிவரும்

★ குறைந்த விலையில்---
★ சிறந்த முறையில்---
தயாராகிறது!

★

விலை: 50 காசு

'நம் நாடு' — இராயபுரம் — சென்னை - 13


# நுழைந்த படைகள் வெளியேறுகின்றன

போலந்து, அங்கேரி, பல்கேரி ஆகிய நாடுகள், செக்கோஸ்லோவேகியாவிலிருந்து தங்கள் படைகளைத் திரும்பப் பெறத் துவங்கியுள்ளன.

கிழக்கு ஜெர்மன் படைகளும் செக் நாட்டு எல்லையைக் கடந்து தங்கள் தளங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன.

# அமைச்சர் சத்தியவாணிமுத்து மேலை நாடு பயணம்

## இலண்டன் தமிழ்ச் சங்கத்தில் அறிஞர் அண்ணா படம் திறக்கிறார்

சென்னை, செப். 4—
தமிழகச் செய்தித்துறைஅமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுக்கு இங்கிலாந்து அரசு அழைப்பு விடுத்துள்ளது; அவ்வழைப்பை ஏற்றுக்கொண்ட அமைச்சர், செப். 8 அல்லது 9-ம் தேதி வாக்கில் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

இலண்டன் தமிழ்ச் சங்கம் கொண்டாடும் அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் விழாவில் 15—9—68 அன்று கலந்துகொண்டு அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைக்கிறார்.

இங்கிலாந்து நாட்டில் சமூக நலத் திட்டங்கள் — பெண்கள், குழந்தைகள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் விதத்தை அறிந்து வருவது அமைச்சர் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

செப். 14-ந்தேதி இலண்டன் போய்ச் சேரும் அமைச்சர், இம்மாதம் 22-ம் நாள்வரை இங்கிலாந்து நாட்டில் சுற்றுப்பயணம் செய்கிறார். இப்பயணத்தின்போது வேறு சில நாடுகளுக்கும் அமைச்சர் செல்லவிருக்கிறார்.

இலண்டன் செல்லும் வழியில் டச்சு நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாம் —பெல்ஜியம் நாட்டிலுள்ள பிரசல்ஸ்—மேற்கு ஜெர்மனியிலுள்ள பிராங்க்பர்ட் ஆகிய நகரங்களுக்கும் செல்லவிருக்கிறார்.

இத்தாலி நாடும் அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இலண்டனிலிருந்து திரும்பும் வழியில் பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரிஸ் நகரத்துக்கும், இத்தாலி நாட்டிலுள்ள ரோம் நகரத்துக்கும், எகிப்து நாட்டிலுள்ள கெய்ரோ நகருக்கும் அமைச்சர் செல்கிறார்.

தம் பயணத்தை முடித்துக் கொண்டு அமைச்சரவர்கள், இம்மாதம் இறுதியில் தமிழகம் திரும்புவார்கள்.

# ஆசிரியர் துயர் துடைக்கும் அரும் பணி

## ஆபத்துக் காலத்தில் கைகொடுத்துதவும் நிறுவனம்

இந்நாட்டிலுள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் பொறுத்தவரையில், 'ஆசிரியர் நாள்' ஒரு நன்னாளாகும்; ஏனென்றால், இந்த நாளில்தான் ஆசிரியர்களிடமிருந்து கல்வியைப் பெற்றவர்கள் அவர்களுக்கு நன்றிக்கடன்செலுத்துகிறார்கள். ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி நிறுவனத்தின் மூலம் இந்த நன்றிக்கடன் செலுத்தப்படுகிறது. 1962-ம் ஆண்டில் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது.

பண நெருக்கடி போன்ற பல்வேறு இன்னல்களுக்குள்ளாகும் ஆசிரியர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் உதவியளிப்பதே இந்த நிறுவனத்தின் நோக்கம்.

ஆசிரியர் நாளன்றுவிருப்பஅடிப்படையில் வழங்கப்படும் தொகையில் 80 சதவிகிதத்தை மாநிலச் செயற்குழுக்களுக்கு வழங்குகிறார்கள். இன்னலுக்குள்ளாகியிருக்கும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் குடும்பத்தினருக்கும் இது வழங்கப்படுகிறது; எஞ்சிய தொகை மத்திய அரசாங்க ஆசிரியர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது. இதன் குறியளவு ரூ. 5 கோடியாகும்.

இதுவரை மாநில செயற்குழுக்களுக்கு ரூ. 80 இலட்சம் அனுப்பப்பட்டுவிட்டது. இதில் 25 இலட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. சுமார் 5,000 ஆசிரியர்களும், ஆசிரியர் குடும்பத்தினரும் உதவி பெற்றுவிட்டார்கள்.

தமிழ்நாட்டில் 1966 செப்டம்பரில்தான் மாநில அரசு முதல்தடவையாக 'ஆசிரியர் நாள்' கொண்டாடியது. சுமார் ரூ. 9 இலட்சம் வசூலிக்கப்பட்டது. ரூ. 7,85,000 மாநில செயற்குழுவுக்கு வழங்கப்பட்டது; இப்போது இந்தக் குழு ஆசிரியர்களுக்கு உதவி வழங்கத் துவங்கிவிட்டது.

ஆசிரியர்களின் இன்னல்களை அகற்றவும்,சமயத்தில்உயிரைத் காக்கவும் இந்தத் தேசிய நிறுவனம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பல.

இந்தத் தேசிய நிறுவனம், நோயுற்ற ஆசிரியர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்கிறது.

வசூலாகும் தொகை தேவையைவிட மிகச் சிறியதேயாகும்; இருப்பினும், ஆசிரியர்களுக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம் என்பதையும், இதை முழுமையாகத் திருப்பிச் செலுத்த முடியாது என்பதையும்உணர்ந்து இயன்றதைக் கொடுக்க மக்கள் முன்வருகிறார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது.

# தமிழக அரசின் கடன் பத்திரத் திட்டம்

சென்னை, செப். 5—
தமிழக அரசு ரூ. 18 கோடிக்குக் கடன் எழுப்பியிருந்தது.

கடன் பத்திரங்கள்மீதான வசூல் முழு அளவுக்குக் கிடைத்துவிட்டதால், விற்பனை நிறுத்தப்பட்டுவிட்டது.

### செங்கற்பட்டு மாவட்டத்தில்...

தமிழக அரசின் வளர்ச்சிக் கடன் பத்திரங்கள் விற்பனையில், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 75 இலட்சமும் வசூலாகிவிட்டது.

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியின் இலக்கு ரூ. 2 இலட்சமாகும்; அதற்கும் கூடுதலாகவே ரூ. 2,26,900 வசூலாகியிருக்கிறது.

மதுராந்தகம் தாலுகாவின் நிர்ணய இலக்கான ரூ. 1½ இலட்சம் வசூலாகிவிட்டது.

### வ. ஆ. மாவட்டத்தில்...

வடாற்காடு மாவட்டத்தில் ஒரே நாளில் ரூ. 1.10 கோடி வசூலாகியது; திட்டமிட்டதைவிட ரூ. 10 இலட்சம் அதிகமாகும்.

# மக்கள் குறைகளைக் கவனிக்கும் திட்டம்

## பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்

### அமைச்சர் மதியழகன் தகவல்

மதுரை, செப். 4—
"பொதுமக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு அண்மையில், செங்கற்பட்டு மாவட்டம் தண்டலத்தில் மூன்று அம்சத் திட்டம் ஒன்று துவக்கி வைக்கப்பட்டது; இந்தத் திட்டம் வெற்றியளிக்குமானால், இது, பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

"இந்தத் திட்டப்படி, கிராம மக்களின் மனுக்கள் --- அவை கிடைத்த 20 நாட்களுக்குள் முடிவு செய்யப்படும்"
என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# நாட்டுப் பாதுகாப்பு நிதி

சென்னை, செப். 6—
நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு சூலைத் திங்கள்வரையில் தமிழகத்தில் சேர்ந்துள்ள தொகை ரூ. 1,60,98,337 ஆகும்.

## சங்கரதாஸ் நூற்றாண்டு விழா

நாடகாசிரியர் சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள், 7—9—68 மாலை 6 மணிக்கு மதுரை தமுக்கம் சங்கரதாஸ் கலையரங்கில் நடைபெறும்; முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் நாடகாசிரியர்கள் பட்டங்களை—டி. கே. பகவதி, ம. சங்கரலிங்கம், வி. சு. விசுவநாதன், புலவர் முருகேசக் கவிராயர், எஸ். டி. சுந்தரம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, கே.பி.சானகி அம்மாள் எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்துவைப்பர்;

8—9—68 காலை 9 மணிமுதல் 12-30 மணி வரையிலும், மாலை 4 மணிமுதல் இரவு 8 மணிவரையிலும் நாடகக் கருத்தரங்கு நடைபெறும்; அறிஞர் பலர் கலந்துகொள்வர்; தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தலைமைவகிப்பார்; குன்றக்குடி அடிகளார் சிறப்புரையாற்றுவார்; இரவு 9 மணிக்கு நாடகம் நடைபெறும்.

## அறிஞர் அண்ணா உடல்நிலை

### கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

சென்னை, செப். 5—

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தியறிந்ததும், கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியனும், பொதுப்பணி அமைச்சர் திரு. கருணாநிதியும் தங்கள் நிகழ்ச்சிகளையெல்லாம் ரத்து செய்துவிட்டுச் சென்னைக்கு விரைந்து வந்தனர்.

மருத்துவமனையில் உள்ள அண்ணா அவர்களை, அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி, சாதிக்பாட்சா, சத்தியவாணிமுத்து மற்றும் சி. பா. ஆதித்தனார், க. இராசாராம், அன்பில் தர்மலிங்கம், அரங்கண்ணல், கவிஞர் ஆனந்தம் ஆகியோர் சந்தித்தனர்.

அண்ணா அவர்களை, மருத்துவர்கள் சோதித்தபோதும் இவர்கள் உடனிருந்தனர். நேற்று சுமார் அரைமணி நேரம் அண்ணா உடல்நிலை சோதிக்கப்பட்டது,

அண்ணா அவர்கட்கு முழு ஓய்வு தேவைப்படுவதாலும், அவரை யாரும் பார்க்க வேண்டாம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளதாலும், கழகத் தோழர்கள் மருத்துவமனைக்கு வராமலிருக்குமாறு அமைச்சர்கள் நெடுஞ்செழியனும், கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உடல்நிலை காரணமாக அண்ணா அவர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# நெல்லரைவையில் புரட்சி

## ரூ. 112-இலட்சம் செலவில் 12-நவீன ஆலைகள்

### அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர்கள் மதியழகன் -- மாதவன் விளக்கம்

புதுக்கோட்டை, செப். 6—

" தஞ்சை மாவட்டம் தமிழ்நாட்டின் நெற் களஞ்சியம்; தமிழகத்திற்குத் தேவையான உணவை இந்த மாவட்டம்தான் கொடுக்கிறது.

" தமிழ்நாட்டில் ரூ. 112-இலட்சம் செலவில் 12- அரிசி ஆலைகள் அமைக்கப்படும்; அதில் 5-ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் 5-இடங்களில் அமைக்கப்படுகின்றன.

" தஞ்சை மாவட்டத்தில் தற்போது 1,000 அரிசி ஆலைகள் இருக்கின்றன; அவற்றில் 350-ஆலைகள் ஒழுங்காக வேலை செய்கின்றன; இந்த ஆலைகளில் 2-இலட்சம் டன் நெல் அரைக்கப்படுகிறது; ஆனால், 5-நவீன ரக அரிசி ஆலைகள் அமைக்கப்பட்டால், அந்த ஆலைகள் மட்டும் 1½-இலட்சம் டன் நெல் அரைக்கும்; ஒரு மணி நேரத்திற்கு 2-டன் நெல் அரைக்கக் கூடும்"

இவ்வாறு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள்' பட்டுக்கோட்டையில் ரூ. 8-இலட்சம் செலவில் அமைக்கப்படும் நவீன அரிசி ஆலைக்கு அடிக்கல் நாட்டுவித்துப் பேசுகையில் விளக்கினார்.

விழாவிற்கு வி. எஸ். தியாகராசனார் தலைமை தாங்கினார்.

### அமைச்சர் மாதவன்

அரிசி ஆலையின் சேமிப்புக் கிடங்குக்கு அமைச்சர் மாதவன் அடிக்கல் நாட்டுவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொதுமக்களும், விவசாயிகளும் ஒத்துழைப்புத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

கூட்டுறவு டைரக்டர் ஜி. என். தாஸ், மற்றும் பலர் பேசினர்.

## ஆசிரியர்கள் துயர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த விழா, மவுண்ட்ரோடு பாலர் அரங்கில் நடைபெற்றது.

தமிழக அரசின் கல்வித் துறைத் தலைமை ஆலோசகர் திரு. என். டி. சுந்தரவடிவேலுவும் விழாவில் பங்கேற்றார்.

மாநிலக் கல்வித் துறை நெறியாளர் திரு. சண்முகம் வரவேற்றார்.

மாநிலக் கல்வித் துறை நெறியாளர் சண்முகம் வரவேற்புரையாற்றுகையில், 'ஆசிரியர் நலத் தேசிய நிதிக்கு இதுவரையில் ரூ. 15-இலட்சம் சேர்ந்திருக்கிறது' எனத் தெரிவித்தார்.

"தற்போது ஓய்வுபெற்ற 59 ஆசிரியர்கள் இந்த நிதியிலிருந்து உதவிபெற்றுவருகிறார்கள்" என்றும் அவர் சொன்னார்.

## ஆயிரம் மதிப்பு எண்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(மார்க்) தரப்படும்; மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சிக்கு இத்திட்டம் உதவும்" என்றும் அமைச்சர் விளக்கினார்.

"நாட்டின் வருங்காலக் குடிமக்களான மாணவர்களின் ஒழுக்கத்தை வளர்க்கும் பொறுப்பு ஆசிரியர்களைச் சேர்ந்தது; சமூகம் கட்டுப்பாடான வகையில் இருக்க வேண்டுமானால் கல்வி நிலையங்கள் அறிவுக்கூடங்களாக மட்டுமன்றி கட்டுப்பாட்டையும் கற்பிக்க வேண்டும்" என்றும் அமைச்சர் வற்புறுத்தினார்.

டாக்டர் இராதாகிருஷ்ணனின் பிறந்த நாளுடன் ஆசிரியர் தினமும் சேர்ந்து கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானதென்றும் ஆசிரியர் சமுதாயத்திற்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் பெருமை தேடித்தந்துள்ளார் என்றும் கூறினார்.

## எதற்கெடுத்தாலும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறது. வீட்டு வரி, தொழில் வரி இல்லாமல் மாஸ்கோ நகராட்சி, நிர்வாகம் நடத்துகிறது. அங்கு ஆண்டுக்கு 5 இலட்சம் வீடுகள் புதிதாகக் கட்டப்படுகின்றன; வீட்டுப் பிரச்சினைக்கே அங்கு இடமில்லை; இவற்றையெல்லாம் பார்க்கும்போது எனக்கு வியப்பாகவே இருந்தது."

## சென்னையில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் ஊர்வலம்

★

பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, 22—9—68 ஞாயிறு, பிற்பகல் சென்னையில் மாபெரும் ஊர்வலம் நடத்த சென்னை மாவட்டக் கழகம் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

செயல்வீரர் சு. பாலன் எம்.சி., அவர்கள் தலைமையில் ஊர்வலக் குழுவினர் உற்சாகமாகப் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாண்டு நடைபெறும் ஊர்வலம் இதுவரை நடைபெற்ற ஊர்வலங்களையெல்லாம் மிஞ்சும் வகையில் அமைய வேண்டும். நாம் எதிர்க் கட்சியாக இருந்தபோது ஈடு இணையற்ற பல ஊர்வலங்களை நடத்தியிருக்கிறோம்; இன்று ஆளும் கட்சியாகையால் இரட்டிப்புச் சிறப்போடு ஊர்வலம் இருக்க வேண்டும்.

கிளைக் கழகங்களின் ஒவ்வோர் அமைப்பும் தமிழக அரசின் சாதனைகள்—மாநகராட்சி மன்றச் சாதனைகள் ஆகியவற்றைச் சித்தரிக்கும் டிரக்கு வண்டிகளை -- சைக்கிள் ரிக்ஷாக்களை ஊர்வலததில் கலந்துகொள்ள ஆவன செய்யுமாறு செயல் வீரர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஊர்வலம் வரும் பாதையில் அமைக்கப்பட இருக்கும் மேடையில் நின்று நீதிபதிகள் ஊர்வலத்தைப் பார்வையிடுவர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் டிரக்குகளுக்குப் பொதுக்கூட்டத்தில் பரிசு வழங்கப்படும். நீதிபதிகள் யார் யார் என்பது பின்னர் அறிவிக்கப்படும்.

செயல் திறம் படைத்த செம்மல்களே! நமது அரசின்—மாநகராட்சியின் சாதனைகளை மட்டும் விளக்குங்கள்! தனிப்பட்ட யாரையும் தாக்கியோ, கிண்டல் செய்யும் காட்சிகளையோ சித்தரிக்க வேண்டாம்.

புற்றீசல்போலப் புறப்பட வேண்டும் -- டிரக்குகள்! இன்றே முனைந்து செயல்படுங்கள்!

நீலநாராயணன்,
மாவட்டச் செயலாளர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible] வெளியிடப்பெற்றது

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 7--9--68

**கடலூர்**

17-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு திருப்பாப்புலியூர் தேரடித் தெருவில்; தலைவர்: ஏ. எஸ். இராமச்சந்திரன்; பேசுவோர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., திருவை அண்ணாமலை, சி. கோவிந்தராசன், சி. இரணியன், எஸ். ஈ. செயராமன், பி. கண்ணன், மற்றும் பலர்.

### 8--9--68

**திருவந்திபுரம்**

எம். ஜி. ஆர். மன்ற ஆண்டு விழாவும தி. மு. க. கிளை திறப்பும்; மாலை 5 மணிக்கு எம். ஜி. ஆர். திடலில்; தலைவர்: ந. பட்டுராஜா; பேசுவோர்: அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன், இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், இரணியன், மற்றும் பலர்.

**கடலூர்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மஞ்சை நகர் திடலில்; தலைவர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., பேசுவோர்: இரா. நெடுஞ்செழியன், ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், கி. தண்டபாணி எம்.சி., வி. நடேசன் எம்.சி., கே. செயராமன் எம்.சி., கே. முத்து எம்.சி., சரோஜா செயராமன் எம்.சி., ஆர். நடராசன் எம்.சி., ஏ. சுப்பிரமணியம் எம்.சி., பி. கண்ணன்.

**மதுரை**

14-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு நாயக்கர் புதுத் தெருவில்; தலைவர்: மா. சங்கரபாண்டியன்; பேசுவோர்: து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., சொ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., கூடலரசன், பி. இராமச்சந்திரன், ரவி, அ. பன்னீர்செல்வம், மு. இராமசாமி, மற்றும் பலர்.

**கருவிளச்சேரி**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: கு. வீரப்பன்; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி.; இரா. செழியன் எம்.பி., சு. பத்மநாபன், கோவி. நாராயணசாமி, இராசமாணிக்கம், அ. பெரமு, சை. சர்புதீன், இரா. இராமதாசன், சாமிநாதன், மற்றும் பலர்.

**கண்ணனூர்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: வை. தனரத்தினம்; பேசுவோர்: சேலம் தண்டபாணி; எம். எஸ். வெங்கடாசலம், எம். காசிராசன், செல்லமுத்து, குயிலன்.

**கோட்டாறு**

6-வது வட்ட தி. மு. க. சார்பில், நடிகமணி டி. வி. நாராயணசாமிக்குப் பாராட்டு; மாலை 7-மணிக்கு வீரபத்திரன் சந்நிதியில்; தலைவர்: ப. கோபாலன்; வரவேற்பு: டி. ஏ. சேவியர்; பேசுவோர்: எம். சி. பாலன் எம்.எல்.ஏ., இளம்பரிதி, ஆர்.டி. அரசு, பி. எம. கண்ணு, சு. வன்னியபெருமாள்.

**விழுப்புரம்**

நாவலர் மன்றச் சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-மணிக்கு பூந்தோட்டத் திடலில்; தலைவர்: கே. வெங்கடேசன்; கொடியேற்றுபவர்: எஸ். ஏ. ஏழுமலை; பாராட்டுப் பெறுபவர்: வி. சுப்பிரமணியம்; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், வி. கிருஷ்ணமூர்த்தி

## அமைச்சர் முத்துசாமி

### சுற்றுப்பயணம்

செப். 7 மாலை 6-மணி: செய்யூர் ஊராட்சி வரவேற்பு; 6-30 மணி: செய்யூர் மூன்றம்சத் திட்டத் துவக்க விழா.

செப். 8: சென்னை.

செப். 9 காலை 9-மணி: திருவண்ணாமலை திருமணம்; 10-30 மணி: துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயக் கிடங்கு திறத்தல்; திருவள்ளுவர் படத் திறப்பு விழா; ஒன்றிய வரவேற்பு. (துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தமிழக அரசின் முதல்வர் அறிஞர் அண்ணாவின் உருவப் படம் திரு. ப. உ. சண்முகம் எம்.எல்.சி. திறந்துவைப்பார்) 12 மணி: வேங்கிக்கால் ஊராட்சியில் மேல்நிலை குடிநீர்த் தொட்டித் திறப்பு விழா. மாலை 3-மணி: அடி அண்ணாமலை ஊராட்சியில் ஒன்றியத் துவக்கப் பள்ளிக் கல் நாட்டு விழா; 4-மணி: மலப்பாம்பாடி ஊராட்சி அலுவலகக் கட்டிடக் கல் நாட்டு விழா; 5-மணி: நொச்சிமலை ஊராட்சியில் சமுதாயக் கிணறு துவக்க விழா; 6-மணி: திருவண்ணாமலை பொதுக்கூட்டம்.

## கூடலரசன் சுற்றுப்பயணம்

செப். 8: மதுரை; 12: பள்ளப்பட்டி; 15: சத்தியமங்கலம்; 16, 17: கோவை; 18: மதுரை; 19: பரமக்குடி; 20: திருவில்லிபுத்தூர்; 21: திருப்பூந்துருத்தி; 22: திருச்சி; 23, 24: தெலுங்குபாளையம்; 25: ஒலகடம்; 26: ஈரோடு; 30; கரூர்.

## குழுக் கூட்டம்

"சென்னை 20-வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம், 8—9—68 இரவு 7 மணிக்கு அரண்மனைக்காரத் தெரு, 59-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்" என்று செயலாளர் கு. பொன்னுசாமி அறிவிக்கிறார்.

## மருத்துவமனையில் மாயூரம் கிட்டப்பா

மாயூரம், செப். 6—

மாயூரம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா, டைபாயிடு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, தஞ்சை அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## சங்கொலிக்குப்பம் பேருந்து நிலையத் திறப்பு

கடலூர் — சங்கொலிக்குப்பம் கிராமப் பொதுப் பேருந்து நிலையத்தையும், வானொலி நிலையத்தையும் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 8—9—68 மாலை 4 மணிக்கு திறந்துவைப்பார்; இவ்விழாவுக்கு திரு. இரெ. இளம்வழுதி தலைமைவகிப்பார்.

எம்.பி., மு. சண்முகம் எம்.எல்.ஏ., ஏ. கிருட்டினமூர்த்தி, ஏ. பக்தவத்சலம், மற்றும் பலர்.

**தாராபுரம்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு வசந்தாப்பேட்டையில்; தலைவர்: பெ. நாட்டராயன்; பேசுவோர்: கோவைச் செழியன், எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி., வி. பி. பழனியம்மாள் எம்.எல்.ஏ., பா. தண்டபாணி, மு. பழனிசாமி, கா. வெ. குப்புசாமி, இரா. செல்வராசன், ஆ. அன்பரசு, வெ. கு. கந்தசாமி எம்.சி., டி. ஜி. இராசேந்திரன் எம்.சி., கே. எம். இப்ராகிம்.

**திண்டுக்கல்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரிய கடை வீதியில்; தலைவர்: எம். மதார்சா; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., பொன். சீனிவாசன், மற்றும் பலர்.